# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 259/2025** |
| Prosecution witness | : | P.W. 3 |
| List of witness | : | L.W6 |
| Name | : | செல்வராஜ் |
| Father's /Husband Name | : | பொன்னுசாமி |
| Village | : | வடகண்டம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 83 |
| Occupation | : | கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 12th day of May 2026. Both accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். அ.சா-.1 ஐ எனக்கு தெரியும். அவரும் எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். எனக்கு நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது. தேதி மாதம் வருடம் சரியாக நினைவில்லை. ஒரு நாள் நான் வீட்டில் இருந்த போது போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 பிரிவின் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் வழக்கு கோப்பின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 09.05.2024 ம் தேதி அன்று இரவு 08.00 மணியளவில் அ.சா.1 அவரது அப்பாவை பார்ப்பதற்காக சென்ற போது பக்கத்து வீட்டில் வசிக்கும் அவரது தம்பி வீட்டிற்கு சென்றார் என்றும், அ.சா.1ன் தம்பி அவரை கொச்சை வார்த்தைகளால் திட்டியும், வீட்டிலிருந்த அருவாளை எடுத்து வந்து அ.சா.1 ஐ வெட்டியும், இரண்டாம் எதிரி கையால் அவரை

அடித்தும் அவர் திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்தவமனையில் சிகிச்சையில் இருப்பதாக கேள்விப்பட்டேன் என்றும் கடந்த 21.05.2024 ம் தேதி மாலை 18.30 மணிக்கு குடவாசல் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்ய வேண்டும் என்றும், என்னிடமும் மணி என்பவரிடமும் கேட்டுக்கொண்டதன்பேரில் எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாரள் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்தார் என்றும். அதில் நானும் மணி என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் 21.05.2024 ம் தேதி அன்று போலிசார் என்னை விசாரித்த புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றும், உண்மை சம்பவத்தை கூறிவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :- இல்லை.

**<u>மறு விசாரணை :-</u>** இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.12 14:06:27 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.